அணுகுண்டு யுகத்தில் அஹிம்சையும், ஆத்ம சக்தியும்.

Regd. No. M 6207.

கிராமோதயம்

ஆசிரியர்: ப. கோவிந்தசாமி

(அகில பாரத சர்க்கா சங்கத்தின் மாதமிருமுறை பத்திரிகை)

மலர் 2 திருப்பூர் - ஜனவரி 15 * 1954 * விலை 1 அணா இதழ் 6

CONNEMARA PUBLIC LIBRARY
3 - JAN 1956
MADRAS

பாக்–அமெரிக்க ராணுவ ஒப்பந்தம் பற்றி வினோபா

"அமெரிக்காவுக்கும், பாகிஸ்தானுக்குமிடையே நடைபெற்றுவரும் ராணுவ ஒப்பந்த பேச்சு வார்த்தைகள் காரணமாக ஆசிய நாடுகளில் சிறிது கொந்தளிப்பேற்பட்டிருக்கிறது. அந்நாடுகள் இந்த ஒப்பந்தத்தின் விளைவுகளைக் குறித்து பீதியடைகின்றன. ஆனால் மக்கள் கட்டுப்பட்டு, உறுதிப்பாடுடன் இருக்கும் நாடுகள் பயப்பட வேண்டிய அவசியமில்லை.

"இந்த ஒப்பந்தம், தேசிய பிரச்னைகளில் மக்கள் காட்டிவந்த அலட்சியத்தைப் போக்கி, சிறிது கலக்கத்தை உண்டாக்கியபொழுதிலும், விழிப்படைய செய்திருப்பதானது, விரும்பத்தக்க நற்பயனே!

"ஒற்றுமை பாவனையும், சகோதரத் தன்மையும் தேச மக்களிடையே தோன்றினால் இந்த ஒப்பந்தத்தின் விளைவுகளை சமாளிப்பதில் எவ்வித கஷ்டமும் இல்லை. ஆனால் **இதற்காக ஏழைமையை ஒடுக்க வேண்டும்!!"**

பூல் பாரஸ்,
தர்பங்கா

— **ஸ்ரீ வினோபா**

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க இந்திய தேசீய தொழிற் சங்கத்தின் யோசனைகள்

[ஜல்காமில் சென்ற டிசம்பர் 31ந்தேதி முதல் அகில இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரஸின் மகாசபைக் கூட்டம் நடந்தது ஞாபகமிருக்கலாம். அதில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவது பற்றி நிறைவேறிய சில தீர்மானங்களை கீழே தருகிறோம். தீர்மானங்கள் முற்றிலும் பயனளிக்கத் தக்கவை என்று நாம் கருதாதபொழுதிலும், அனுபவ சாத்தியமானவை என்று கூறலாம். — ஆசிரியர்]

1. இயந்திரமயமான உற்பத்தி சக்தி படைத்த பெருவாரியான பெரிய தொழில்களின் உதவியைக் கொண்டு, சிறு கைத்தொழில்களுக்கு உதவியளித்து அவைகளை நடத்த வேண்டும்.

2. பெரிய இயந்திர தொழிற்சாலைகளுக்கும், சிறு கிராமக் கைத்தொழில்களுக்கும் வேலை எல்லைகள் வரையறுத்து ஒதுக்கப்பட வேண்டும்.

3. நமது தேசத்தில் உற்பத்தியாகக் கூடிய பொருட்களையும், உணவுப் பொருட்களையும், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதை உடனடியாகவும் கடுமையாகவும் கட்டுப்படுத்த வேண்டும்.

4. சுதேசி பொருட்களுக்கு உதவியும், ஊக்கமும் அளிக்கப்பட வேண்டும்.

இந்திய வெளி நாட்டுக் கொள்கை பற்றி ஸ்ரீ கிருபளானி

"இந்திய சர்க்கார் தனது வெளி நாட்டுக் கொள்கை விஷயத்தில் எவ்விதமான தவறு செய்திருந்த பொழுதிலும், அதில் எம்மாதிரி குறைகள் தென்பட்ட போதிலும், அமெரிக்க அல்லது ரஷிய வல்லரசுகள் கோஷ்டிகளிலிருந்து விலகி நின்று, நடுநிலைமை வகித்து வருவது, நம் போன்ற சாமாதான வாஞ்சையுள்ள நாட்டிற்கு சரியான பாதை என்பதில் ஐயமில்லை.

"பாகிஸ்தானுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே நடைபெற்று வரும் ராணுவ ஒப்பந்த பேச்சுவார்த்தைகளின் பயனாக இந்தியாவும் வேறு சில ஆசிய நாடுகளும், அடுத்த மகா யுத்தத்திற்கு அருகாமைக்கு வலுவில் இழுத்துச்செல்லப்பட்டுள்ளன. நாம் இந்த விபரீத நிலையில் வீரம் பொருந்திய, சாகஸத்துடன் பிரச்னைகளைத் தீர்க்க வேண்டும்."

(இலாஹபாத்) — **ஆசார்ய ஜே. பி. கிருபளானி**

ஹைதராபாத் நிலச் சீர்திருத்தங்கள்

பூமிதான யக்ஞத்தின் பிறந்தகமாகிய ஹைதராபாதில்தான் முதன் முதலாக நிலச் சீர்திருத்தங்கள் சிலவும் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லலாம். இந்த சீர்திருத்தங்களுக்கு அந்த ராஜ்ய சட்டசபையில் அதிகாரத்திலிருக்கும் காங்கிரஸ் கட்சியுள்ளேயும், எதிர்க்கட்சியினரிடையேயும் பலமான எதிர்ப்புகள் காரணமாக சட்டம் நிறைவேற சுமார் இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டது.

அந்த சட்டத்தின் முக்கிய அம்சம் நில உடைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ள சில வரம்புகளும், உழவனுக்களித்துள்ள உரிமைகளுமே.

இந்த சட்டப்படி அதிகபக்ஷம் நில உடைமை எல்லைக்கு மேல் வைத்திருக்கும் நிலப் பிரபுக்களிடமிருந்து 10 லட்சம் ஏக்கர் நிலம்தான் நிலமில்லாதோரிடையே விநியோகிக்கக் கிடைக்கக்கூடும்.

அங்கு 200 ஏக்கருக்கு மேல் நிலமுள்ள நிலப் பிரபுக்களின் எண் 8,011. 20 ஏக்கருக்கு மேல் நிலமிருக்கும் விவசாயிகள் எண் 84,101.

சட்டப்படி குடிவார பாத்யதைகளையும், வாரம், குத்தகை, நஷ்ட ஈடு முதலிய பிரச்னைகளையும் கவனிக்க ஒரு நில கமிஷன் நியமிக்கப்படும்.

சட்டப்படி நிலத்திலிருந்து கிடைக்கும் மொத்த வருமானத்தில் பாதி சாகுபடி செலவெனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த சாகுபடி செலவை நில வருமானத்திலிருந்து கழித்து நிகர்

(தொடர்ச்சி 24-ம் பக்கத்தில்காண்க)

3-JAN 1956

கிராமோதயம்

ஜனவரி 15 1954

அணுகுண்டு யுகத்தில் அஹிம்சையும், ஆத்ம சக்தியும்.

[ஸ்ரீ ஹெரால்டு எல்வின் என்பவர் ஒரு பெயர் பெற்ற உலக சைக்கிள் பிரயாணி. அவர் சென்ற உலக யுத்தத்தின் பொழுது ரஷ்யாவில் அமெரிக்க ஸ்தானிக ராலயத்தில் பணியாற்றி வந்தவர். அவர் இந்தியாவில் தனது சைக்கிள் சுற்றுப் பிரயாணத்தை ஆரம்பிக்கு முன்னர் ஸ்ரீ வினோபாஜியை சந்திக்க வந்தார். வந்தவர் புயல் காற்றிலும், சகதியிலும் சென்ற செப்டம்பர் மாத அடைமழையில் வினோபாஜியுடன் கால் நடை யாத்திரை செய்தார்.

அவர் வினோபாஜியுடன் தங்கியிருந்த நாட்களில் நம்மைப் போலவே அவரும் எளிய வாழ்க்கை நடத்த விரும்பினர். அவர் இந்தியப் பண்பாட்டிலும், மனப் போக்கிலும் மிகுந்த நம்பிக்கை யுள்ளவர்.

கீழே அவர் வினோபாஜியிடம் கேட்ட சில கேள்விகளையும், அதற்கு அவர் அளித்த பதில்களையும் தருகிறோம். அவருடைய குறிப்புகளிலிருந்து சில பகுதிகளை 'ஹரிஜன்' பத்திரிகையில் வெளியிட்டிருப்பதைத் தழுவியே கீழே தந்துள்ள பகுதிகள் வரையப்பட்டிருக்கிறது. — ஆசிரியர்]

மனிதனும் இயந்திரமும்

கேள்வி;- வாழ்க்கையில் வெறுப்பையும், கடுமையான உழைப்பையும் தவிர்க்கக் கூடிய இயந்திரங்களைத் தாங்கள் வெறுக்கவில்லை, விரும்புவதாகவே கருதலாமா? தாங்கள் குடிசைத் தொழில்களை ஒடுக்கும் இயந்திரங்களையே விரும்பவில்லை என்று கருதலாமா?

பதில்:- ஆம். அம்மாதிரி கருதலாம். ஆனால் வேறு பல பிரச்னைகளும் உள்ளன. முதலாவதாக ஆகாய விமானம் போன்ற நேரத்தை மீதப் படுத்தும் இயந்திரங்கள் இருக்கின்றன. வேறு வகையில் செய்யவே முடியாத ரேடியோ போன்ற கருவிகளும் உள்ளன. இவைகள் நல்லவை.

இரண்டாவதாக மனிதனுக்குத் தீங்கிழைக்கக்கூடிய அழிவு சாதனங்கள் இருக்கின்றன. போர்க் கருவிகள். அவை கெட்டவை.

மூன்றாவதாக உற்பத்திக்காக உழைப்பதிலிருக்கும் இன்பத்தைக் குலைத்து, வேலையில்லாத் திண்டாட்டத்தை பரப்பும் இயந்திரங்களும் இருக்கின்றன. பெருவாரியாக துணிகளையும், தளவாடங்களையும் தயாரிக்கும் இயந்திரங்களால் கிராமங்களுக்கு நேரடியான நஷ்டமே ஏற்படுகின்றது. இதனால் ஆக்கத்திலிருக்கும் இன்பம் அழிவதோடு வேறு பல தீங்குகளும் விளைகின்றன.

இந்த மூன்றும் தர இயந்திரங்கள் இன்றைய சூழ்நிலையில் இந்திய கிராமங்களுக்குத் தீங்கிழைப்பவை. ஆனால் இவை என்றும் அவ்வாறிருக்கும் என்பதில்லை. வேறு நாடுகளில் இவைகளால் நற்பயனும் ஏற்படலாம். சூழ்நிலைக்குத்தக்க உபாயம் தேடவேண்டும். தற்சமயம் நமது கிராமங்களின் பிரச்னை கிராமக் கைத்தொழில்களால் தான் தீர்க்க முடியும்.

யுத்தமும் அஹிம்சையும்

கேள்வி:- 1938-ல் நார்வே தேசத்தின் வெளி நாட்டிலாக்கா மந்திரியிடம், தன் தேசப் பாதுகாப்புக்காக அவர் என்ன ஏற்பாடு செய்வார் என்று கேட்கப்பட்டது? அவர் "மற்ற நாடுகளின் நல்லொழுக்கத்தில் நம்பிக்கை வைப்போம்" என்று பதிலளித்தார். ஆனால் 1940-ல் ஒரு சில பயங்கரமான மாதங்களில் இந்த சமாதானத்தில் நம்பிக்கையிருந்த அழகிய நாடு ஜெர்மானியர்களால் படையெடுக்கப்பட்டு வீழ்ச்சி யடைந்தது.

தாங்கள் இந்த விஷயத்தில் சரியான நடவடிக்கை எதுவாயிருக்கும் என்று கருதுகிறீர்கள்?

பதில்:- நார்வேயின் வெளி நாட்டிலாகா மந்திரி அஹிம்சை தத்துவத்தைப் பரப்பியிருக்க வேண்டும். அஹிம்சை என்பது ஒரு ஆக்க சக்தி வாய்ந்த ஆயுதம். அது வெறும் ஆயுதம் தாங்க மறுக்கும் (Pacifism) "அமைதிவாத"த்திற்கு முற்றிலும் மாறுனது.

கேள்வி;- தங்கள் பதில் ஒரு அழகிய கனவாகவும், அதை அடையும் வழி வெகு தூரம் நீண்டதாகவுமே எனக்குத் தோன்றுகிறது.

பதில்;- லட்சியத்தை அடையும் வழி வெகு தூரம் நீண்டதென்று தாங்கள் கூறுவதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. யுத்தம் என்ன பயனைத் தருகிறது?

சென்ற 25 வருடத்திற்குள் இரண்டு உலக மகா யுத்தங்களைப் பார்த்தாகிவிட்டது. ஆனால் நாம் இன்றும் சமாதானத்திலிருந்து வெகு தூரத்திலிருக்கின்றோம். சமாதானம் நெருங்க வில்லை. உலக மக்கள் கூடிய சீக்கிரம் பலாத்காரத்தால் ஒன்றும் சாதிக்க முடியவில்லை; அஹிம்சையால் தான் வழியே ஏற்படும் என்று உணர்ந்து விடுவார்கள்.

கேள்வி:- தாங்கள் ஒரு நல்லவராகப் பேசுகிறீர்கள். நீங்கள் ஒரு தத்துவ ஞானியாகவும், அஹிம்சா வாதியாகவுமே பேசுகிறீர்கள். ஆனால் உலகில் எண்ணற்ற "ஹிட்லர்கள்" இருக்கின்றனர். அவர்கள் நல்லவருமில்லை, தத்துவஞானிகளுமில்லை, அஹிம்சா வாதிகளுமில்லை.

பதில்:- தாங்கள் ஹிட்லர்களை என்னிடம் வரச்சொல்லுங்கள். நான் அவர்களைக் கண்டு அஞ்சவில்லை. ஜெர்மனியும் தனது படிப்பினையை கற்றுக்கொள்ளும். அவர்களுக்கு ஒரு ஹிட்லர் கிடைத்ததால் அடைந்த பயனைப் பாருங்கள்!

கேள்வி:- ஜெர்மனியில் மற்றொரு ஹிட்லர் தோன்றலாம்.

பதில்:- மற்றொருவரா! பலர். நான் உறுதி கூறுகிறேன், அந்நாட்டு மக்கள் தெரிந்துகொள்வார்கள். இறுதியில் அவர்களுடைய அனுபவமே அவர்களுக்கு வழி துலக்கும். நான் உலகயுத்தத்தைக்கண்டு அஞ்சவில்லை. சிறு குட்டிச்சண்டைகளையே பார்த்து நான் அஞ்சுகிறேன். நமக்கு நமது வாழ்நாளிலேயே இரண்டு உலக யுத்தங்களின் அனுபவம் இருக்கிறது. நமக்கு நற்புத்தி புகட்ட மேலும் பல உலக யுத்தங்கள் வேண்டுமென்பதில்லை. உலக யுத்தங்கள் ஏற்படலாகாது என்பதும், அஹிம்சா முறைதான் சமாதானத்திற்கு வழி என்பதுமே இந்த யுத்தங்களின் படிப்பினை. ரஷ்யா கூட இம்மாதிரி சில விஷயங்களைப் புரிந்து கொண்டுதான், தனது கொள்கைகளை மாற்றி வருகிறது.

நூற்பு வேள்வி

கேள்வி:- நீங்கள் எல்லோரும் நூற்கவேண்டுமென்று விரும்புகிறீர்களா? இல்லை, தங்களுடனிருப்பவர்கள் மட்டிலும் கடைபிடிக்க வேண்டிய கொள்கையாகவே கருதுகிறீர்களா?

பதில்:- ஆம். எல்லோரும் நூற்கவேண்டும் என்றே நான் விரும்புகிறேன்.

கேள்வி:- அவரவருக்கேற்ற தொழில்கள் தத்தம் விருப்பப்படி செய்வது தான் சரி என்று நீங்கள் ஒப்புக்கொள்ள வில்லையா? ஒருவர் மற்ற வரைக் காட்டிலும் சிறப்பாக தச்சுவேலை செய்வாராயின், தச்சு வேலை செய்பவரைக் காட்டிலும் மற்றவர் சிறப்பாக நூற்க முடியுமானல் முதலாவது நபர் முழு நேரத்தையும் தச்சு வேலை செய்வதிலும், இரண்டாவது நபர் முழு நேரத்தையும் நூற்பதிலும் செலவிடுவதல்லவா விரும்பத்தக்கது?

பதில்:- எல்லோரும் செய்யக் கூடிய ஒரு வேலை இருந்தால் நல்லது. அதனுல் எல்லோருக்கும் பொதுவான ஒரு உறவு ஏற்பட உதவும். நூற்பு பயன் நிரம்பியது. எல்லோரும் தினந்தோறும் சுமார் 15 நிமிடங்கள் நூற்பார்களேயானுல்கூட அதனுல் பெருத்த நற்பயனே ஏற்படும்.

பணம்

கேள்வி:- தங்கள் பொருளாதார லட்சியங்களைப் பற்றி உழைப்பின் மூலம் நடைமுறையில் கிடைக்கும் ஊதியத்தைக் காட்டிலும், உழைப்பின்றி குவித்துவைத்துள்ள முன் நாள் சம்பத்தல்லவா தவறானது? அதையல்லவா முதலில் சமாளிக்கவேண்டும்?

பதில்:- ஆம். நீங்கள் சொல்வது சரி. ஆனுல் நான் பணத்தையே அடியோடு அகற்றிவிட விரும்புகிறேன். எல்லோருக்கும் அன்றன்றைய தேவைகள் கிடைக்கச் செய்தால் போதும். அன்றுடம் தேவையுள்ள உணவு, உடை உறையுள் முதலியன......

கேள்வி:- அதனுல் சிக்கல்கள் ஏற்படாதா? திடீரென்று ஒரு புதல்வனை இங்கிலாந்துக்கு அனுப்பவேண்டுமானுல்?

பதில்:- விளக்கத்தின் பாஷையை இலக்கிய நுணுக்கமாகப் பார்வையிட்டால் சிக்கல்கள் ஏற்படும். ஆனுல் அம்மாதிரி சிக்கல் ஏதும் இல்லை. அது ஒரு அடிப்படைத் தத்துவம். இதனுல் இன்றுள்ள நமது கிராமங்களின் நிலைமையில் அவைகளுக்கு நன்மையே பயக்கும். அது தான், இன்று, நமது உண்மைப் பிரச்னை. ஒருவர் உணவுப் பொருட்களையும், மற்ருெருவர் எண்ணெயும், இம் மாதிரியாக சகல பொருட்களையும் உற்பத்திசெய்ய வேண்டும். அவைகளைத் தங்களுக்குள் பண்டமாற்றம் செய்துகொள்ள வேண்டும்.

கேள்வி:- ஆனுல் யாராவது ஒருவர் எத்தனை எண்ணெக்கு, எவ்வளவு தானியம் என்பதை நிர்ணயிக்க வேண்டுமல்லவா? அம்மாதிரி நிர்ணயிக்காவிடில் குயுக்திக்காரர்கள் கும்மாளமடிக்க மாட்டார்களா?

பதில்:- ஆனுல் பொருளாதார அமைப்பும் வாழ்க்கை முறைகளும், சமூகக்கோட்பாடுகளும் "குயுக்தியால்', பயனளிக்காத முறையில் அமையுமேயானுல் இந்த குயுக்திக்காரர்கள் மறைந்துவிடுவார்கள் !

★

புத்தி, சக்தி, சொத்து ஆகியவைகளை தேசீயமயமாக்க வேண்டும்.

இதுவே பூமிதான யக்ஞத்தின் லட்சியம்

"இன்றைய உலகத்தை முதலாளித்துவம் ஒரு சந்தைக் கடை யாக்கிவிட்டது. கடை வீதியில் சாமான்களை விலைக்கு விற்பது மாதிரி அறிவையும் மனிதன் விற்பனை செய்ய ஆரம்பித்துவிட்டான். இந்த நிலைமை மாறவேண்டும்.

புத்தி, சக்தி, சொத்து எல்லாம் தனி மனிதனுடைய முயற்சியினுலேயே கிடைத்துவிடவில்லை. சமுதாயத்தின் ஒத்துழைப்பு இல்லாவிட்டால் எங்ஙனம் அவை கிடைக்கும்? ஆகவே, புத்தி, சக்தி, சொத்து இவை சமுதாயத்திற்குச் சொந்தமென்று கருதி அவற்றை சமுதாயத்திற்கு அர்ப்பணித்து விடவேண்டும்.

"ஒவ்வொருவனுக்கும் வேலை கிடைக்க உரிமை யுண்டு. நமது அரசியல் சட்டத்தில் தனிப்பட்டவர் சொத்திற்கு பாதுகாப்பளிக்கப்பட வேண்டும் என்று சட்ட ரீதியான உத்திரவாதம் அளிக்கப்பட்டிருக்கிறது. தனிப்பட்டவர் சொத்திற்கு பங்கம் ஏற்பட்டால் கோர்ட்டில் சென்று தாவாபண்ணி நீதி பெற வாய்ப்பும், வசதியும் சட்டம் செய்து கொடுக்கிறது.

"ஆனுல் வேலையில்லாமல் திண்டாடுபவர்களுக்கு எந்தக் கோர்ட்டில், என்ன நீதி கிடைக்க சட்டம் இடம் கொடுக்கிறது? ஒன்றும் இல்லை. இந்நிலை மாறவேண்டும்.

"பஞ்ச நிவாரண வேலை என்று கஞ்சித் தொட்டிகளைத் திறப்பதை விடுத்து, வேலையில்லாமல் தவிக்கும் மக்களுக்கு நிரந்தரமாக வேலை கொடுத்து, அவர்களின் அடிப்படைத் தேவையை அனுசரித்துக் கூலி கொடுக்கவேண்டும். அப்போது தான் அது உண்மையான நிவாரண வேலையாகும்.

"பூமிதான இயக்கம் ஒரு சில நிலச்சுவான்தார்களிடமிருந்து சில ஏக்கர் நிலம் வாங்குவதால் மட்டும் பூர்த்தியடைந்து விடாது. நிலமனைத்தும் கிராமப் பொதுவாகும் வரை இந்த இயக்கம் நடந்துகொண்டுதானிருக்கும். கிராமங்களில் வாழும் நிலச்சுவான்தார்களை மட்டுமல்ல, நகரங்களில் வாழும் தொழிலதிபர்கள், பின்பு வியாபாரிகள் ஆகியோரையும் இந்த இயக்கம் தொடரும். இந்த காலச் சக்கரத்தின் சுழற்சியிலிருந்து யாரும் தப்பிவிடலாம் என்று நினைக்கவேண்டாம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், சுதேச மன்னர்கள், ஜமீந்தார்கள் இவர்களெல்லாம் போன பின்பு, தற்போது நிலப் பிரபுக்கள், அடுத்த முறை தொழிலதிபர்கள், பின்பு வியாபாரிகள்; இது ஏற்பட்டுத் தீரவேண்டிய கால நிகழ்ச்சி.

"விவசாயிகள் நூற்கும் நூலை நெசவாளிகள் வாங்கவேண்டும்; நெசவாளிகள் நெய்த துணியை நாம் வாங்கவேண்டும்; கிராமத்தில் தோல் பதனிட்டுத் தைக்கப்படும் செருப்பை விவசாயிகளும், நெசவாளிகளும் வாங்கவேண்டும்.

"இவ்வாறு ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டு வாழ்ந்தால் நாட்டில் எல்லோரும் இன்புற்று வாழலாம். எல்லோரும் உழைத்து வரும் பயனை எல்லோரும் சேர்ந்து அனுபவிப்போம். இது தான் பூமிதான இயக்கத்தின் லட்சியம்."

— ஸ்ரீ சங்கர்ராவ் தேவ்

ஸ்ரீ சங்கர் ராவ் தேவ் அவர்களின் பூமிதான யாத்திரையில் ராமநாதபுரம் ஜில்லாவிலிருந்து மட்டும் சுமார் 1165 ஏக்கர் நிலம் பூமிதானமாகக் கிடைத்திருக்கிறது. சில குறிப்பிடத்தக்க ஊர்களிலிருந்து கீழ்க்கண்டபடி பூமிதானம் கிடைத்தது.

தேவகோட்டை	27 ஏக்கர்	25 செண்டு	1 கலப்பை
காரைக்குடி	20 ,,	7 ,,	18 ,,
பள்ளத்தூர்	6 ,,	22 ,,	7 ,,
குன்றக்குடி	5 ,,	21 ,,	3 ,,
திருப்பத்தூர்	27 ,,	40 ,,	12 ,,
செற்குப்பை	27 ,,	26 ,,	8 ,,

— டி. டி. திருமலை

ராமநாதபுரம் ஜில்லா பூதான ஊழியர்.

3 - JAN 1954

(21-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஹைதராபாத் நில சீர்திருத்தங்கள்"

ரூ. 800/- வருட வருமானமளிக்கும் நிலப்பரப்பையே ஒரு சராசரி குடும்பத்தின் நில உடைமை வரம்பாக கருதப்பட்டிருக்கிறது.

இம்மாதிரி வருட வருமானம் நிகர் ரூ. 3600/- கிடைக்கக் கூடிய நிலப் பரப்பையே சட்டப்படி அதிகபக்ஷ வரம்பாக வரையறுக்கப்பட்டிருக்கிறது. இந்த வருமானத்திற்கு மேல் அதிகமாக பயனளிக்கும் நிலத்தையே நிலமில்லாதோருக்காக ஆர்ஜிதம் செய்யலாமென்றும் சட்டம் கூறுகிறது.

இனும்களை ஒழித்து அவைகளுக்கு தீர்வை விதிப்பதின் மூலம் கிடைக்கக் கூடிய வருமானத்தைக் கொண்டே இந்த நிலப் பிரபுக்களின் உபரி நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்குரிய நஷ்ட ஈடும் கிடைக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"கல்ஹால் கிராமாபிவிருத்தி வேலைகள்"

ஒருவகையில் கல்ஹால் கிராமத்தில் சென்ற 5 வருட காலமாக "ஒரு கிராமோதய கதர் சங்கம்" செயலாற்றி வருவதாகவே கருதலாம். 1948-ல் கர்னாடக சர்க்கா சங்கத்தின் உற்பத்தி ஸ்தலமாகிய கல்ஹால் நூற்போர்கள் நெசவு கற்றுக் கொள்ள விருப்பம் தெரிவித்தார்கள். ஆடை சுய தேவைப் பூர்த்தியை அடிப்படையாகக் கொண்டு சேவா மனப்பான்மையுடைய ஸ்ரீ நீலகண்டைய்யா கனுசாரி என்பவர் சென்று வேலை ஆரம்பித்தார். சென்ற ஐந்தாண்டுகளில் அங்கு ஏற்பட்ட சில பாராட்டத் தக்க முன்னேற்றங்களை கீழே தருகிறோம்.

(1) 800 பேர்களைக் கொண்ட இந்த சிற்றூரில் 1948-ல் மூன்று டீக்கடைகள் இருந்தன. சில நாட்கள் பிரசாரத்தின் பயனுக இம்மூன்று கடைகளும் மூடப்பட்டு விட்டன. ஆரம்பத்தில் சுமார் 300 பேர்கள் டீ அருந்திவந்த கிராமத்தில் இன்று சுமார் 80 பேர்களைத் தவிர மற்ற யாவரும் டீ அருந்தும் பழக்கத்தை அறவே விட்டுவிட்டார்கள். இதே நிலைதான் இன்று பீடி, சிகரட் விஷயத்திலும் ஏற்பட்டிருக்கிறது, இன்று கிராமத்தில் சிகரட் முற்றிலும் உபயோகப்படுத்தப் படுவதில்லை.

(3) விவசாயிகளுக்கு இரும்புக் கலப்பைகளைக்கொண்டு ஆழமாக உழுது விவசாயம் செய்வதில் அவநம்பிக்கை வைத்திருந்தார்கள். ஆனால் இன்று அந்த கிராமத்தில் சுமார் 45 இரும்புக் கலப்பைகள் விவசாயிகளே வாங்கி யுள்ளார்கள். மேற்கொண்டு 6 இரும்புக் கலப்பைகள், அந்த கிராமத்தில் நிறுவப்பட்டிருக்கும் பலவித நோக்க கூட்டுறவு சங்கத்தில் வாங்கி, ஏழை விவசாயிகளுக்கு சொற்ப வாடகையில், வரிசைக்கிரமமாக உபயோகப்படுத்துவதற்காக கொடுக்கப்பட்டு வருகிறது.

(3) கிராம ஜனங்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை 5 மைலுக்கப்பால் சென்று வாங்கி வந்தனர். இன்று அதே கிராமத்தில் சுமார் ரூ. 500 மூலதனத்தோடு ஒரு கூட்டுறவு பண்டகசாலை ஆரம்பித்துள்ளார்கள். சாமான் வாங்கும் அலைச்சலும் மிச்சம்; மீதியுள்ள நேரத்தை நூற்பு நெசவுக்காகப் பயன் படுத்துகிருர்கள்.

(4) மாவு அரைக்கும் ஒரு இயந்திரத்தை கிராமத்தில் நிறுவ விரும்பினர் ஒரு பணக்காரர், கட்டுப்பாடாக அந்த கிராம மக்கள் அந்த இயந்திரத்தை பகிஷ்கரித்தார்கள், இதன்பயனுக அந்த இயந்திரம் கிராமத்தில் மூடிக்கிடந்தது. பிறகு வெளியே விற்பனையும் ஆகிவிட்டது.

(5) கிராமத்தின் பொது வீதிகள் கிராமக் குடிசைகளின் முன்முற்றத்தைப் போலவே சுத்தமாக வைத்துக்கொள்கிருர்கள்.

(6) காலை மாலை பொதுப் பிரார்த்தனையில் போதிய அளவு மக்கள் கலந்துகொள்கின்றனர், பிரார்த்தனை அங்குள்ள முஸ்லீம் மசூதியில் நடைபெறுகிறது. கிராமத்திலுள்ள 10, 12 முஸ்லீம் குடும்பங்களும், மற்ற 40, 50 ஹிந்து குடும்பங்களும் சகோதரபாவத்தோடு ஒத்து வாழ்கின்றனர்.

(7) ஆடை சுயதேவைப் பூர்த்திக்காக 100 ராட்டைகளும் 10 தறிகளும் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது. கம்பளி நூற்பும், நெசவும் கூட வீடு தோறும் நடைபெறுகிறது.

(8) 6 குடும்பங்கள் ஊதுபத்தி உற்பத்தி செய்து விற்பனை செய்வதில் ஈடுபட்டிருக்கின்றன.

(9) 1951-ல் கடுமையான வரட்சியும், பஞ்சமும் மக்களை துன்புறுத்தியது. கல்ஹால் கிராமவாசிகள் தங்கள் கிராமத்திலிருந்து $2\frac{1}{4}$ மைல் தூரத்திலுள்ள சொன்னூர் என்ற கிராமம் வரை ஒரு ரோடு போடும் வேலையை, பஞ்ச நிவாரண வேலையாக குத்தகை பேசி எடுத்துக் கொண்டார்கள். அதிக வேலை செய்ததின் காரணமாக கிராமவாசிகள் எல்லோருமாக 8 மணி நேரத்தில் பூர்த்தியாக வேண்டிய வேலையை தினந்தோறும் 4 மணி நேரத்தில் பூர்த்தி செய்து விடுவார்கள். இதன் பயனுக பஞ்சம் சூழ்ந்திருந்தபோதிலும் கிராமவாசிகள் கடன்பட வில்லை. துன்பப்பட வில்லை. தனது வேலைத்திறன் அதிகரிக்க வேண்டும்; அத்துடன் தனது வாழ்க்கைத் தரமும் உயரும் என்று எல்லோரும் எண்ணிவந்ததாகத் தென்படுகிறது.

(10) இந்த வேலைகள் யாவும் இரண்டு நான்கு நாட்களில் நடந்து விடவில்லை. ஸ்ரீ நீலகண்டய்யாவின் சுயநலமற்ற சேவையும், பொது ஜன சேவையிலுள்ள ஆர்வமும் கண்டு கிராமவாசிகள் அளித்த ஒத்துழைப்பின் பயனுக சென்ற 5 ஆண்டுகளில் நடந்த வேலைகளே இவை. அவர் காரணமாக சென்ற 5 வருடத்தில் ஒரு சண்டை சச்சரவுகூட கச்சேரிகளில் தாக்கலாகவில்லை. கிராமத்திலேற்படும் சச்சரவுகளை கிராமத்திலேயே பஞ்சாயத்து மூலம் தீர்த்துக்கொள்கிருர்கள். ஒவ்வொரு கேஸும் அதற்கென தேர்ந்தெடுக்கப் படும் ஒரு "நியாயதான மண்டலின்" விசாரணைக்கும், தீர்ப்புக்கும் விடப்படுகிறது. அதன் தீர்ப்பை இருசாராரும் ஏற்றுக் கொள்ளுகிருர்கள்.

வெ. ரா.

இந்த இதழில்

பாக்—அமெரிக்க ராணுவ ஒப்பந்தம் பற்றி
விஞேபா 21
வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்க
இந்திய தேசிய தொழிற் சங்கத்தின் யோசனைகள் 21
இந்திய வெளிநாட்டுக் கொள்கைபற்றி
ஸ்ரீ கிருபளானி 21
ஹைதராபாத் நில சீர்திருத்தங்கள் 21
அணுகுண்டு யுகத்தில்—அஹிம்சையும்
ஆத்மசக்தியும் 22
புத்தி-சக்தி, சொத்து ஆகியவைகளை
தேசீயமயமாக்க வேண்டும் 23
கல்ஹால் கிராமாபிவிருத்தி வேலைகள் 24

இந்தப் பத்திரிகை கையினல் செய்த காகிதத்தில் அச்சிடப்பட்டது.)
"கிராமோதயம்"சந்தாவிபரம்:- தனிப்பிரதி 0-1-0 வருட சந்தா ரூ. 1-8-0 அகில பாரத சர்க்கா சங்கக் கிளைகளில் கிடைக்கும்.
Edited and Published by B. Govindaswami for All India Spinners' Association, (Tamilnad Branch) Tirupur. Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.